Registered as a NewsPaper

# ஈழநாதம்

EELANATHAM

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் 6

விலை ரூபா 6.00

நாதம் 13 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | ஆடி - 21 | 06-08-2002 | செவ்வாய்க்கிழமை | ஓசை 169

சிறந்த முறையில் குறித்த தவணையில் அச்சு வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய நிறுவனம்



சந்திரன் பதிப்பகம்

பரந்தன் வீதி,

புதுக்குடியிருப்பு.

## புலிகள் ~ அரசாங்கம் நேரடிப் பேச்சு நவம்பர்~02 இற்குப் பின்னரே ஆரம்பம்

### சிறிலங்காப் பிரதமர் ரணில் கூறுகின்றார்

(கொழும்பு)

சிறிலங்கா அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேரடிப் பேச்சுவார்த்தை நவம்பர் மாதம் 2 ஆம் திகதிக்குப் பின்னரே ஆரம்பமாகும் என்று சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் இடம் பெற்ற சந்திப்பொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இத்னைக் கூறினார்.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கான நடவடிக்கைகள் எதிர் பார்த்ததை விட வெற்றிகரமாக அமைந்துள்ளது. அமைச்சர் மிலிந்த மொறகொடவிற்கும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பு பேச்சுவார்த்தைக்கான அடித்தளத்தை இட்டுள்ளது.

இருபது வருடங்களாக நடைபெற்று வருகின்ற யுத்தத்திற்கு ஒரு சில ஆண்டுகளில் தீர்வு காண்பது கடினமானது. மக்கள் அளித்த அதிகாரத்தை பயன்படுத்தி மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற முடியும் என நான் நம்புகின்றேன் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பிணையில் வெளியே வர வை.கோ விரும்பவில்லை

### சிறையில் வைத்து ராம்தாஸிடம் தெரிவிப்பு

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் டாக்டர் ஆர். ராம்தாஸ் நேற்று வை.கோ.வை சிறையில் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பை முடித்து விட்டு செய்தியாளர்கள் மத்தியில் பேசிய ராம்தாஸ், சிறையில் வை.கோ. மிகுந்த உற்சாகமாக இருப்பதாக தெரிவித்தார்.

சிறையில் இருந்து பிணையில் வெளிவர வை.கோ. விரும்பவில்லை. அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாகவே தான் கைது செய்யப்பட்டுள்ளதாக வை.கோ. என்னிடம் தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் வரட்சி நிலவி வரும் நிலையில் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க எவ்வித முயற்சியையும் மேற்கொள்ளாது

(6ம் பக்கம் பார்க்க)

# அரசாங்கத்தைக் கவிழ்க்க மேற்கொள்ளும் எந்தச் சதித் திட்டத்தையும் முறியடிப்போம்

### ஐ. தே. கட்சி செயற்குழுவில் தீர்மானம்

(கொழும்பு)

**அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் எந்தவொரு சதித்திட்டத்தையும் எதிர்ப்பது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளது. நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி அரசாங்கத்தைத் தோற்கடிக்க அனுமதிக்க முடியாது. எந்தவொரு நிலைமையையும் சமாளிப்பதற்கு அரசாங்கம் பெரும் திட சங்கற்பத்துடன் நடந்து கொள்ளும் என மேலும் தெரிவிக்கப்படுகிறது.**

நேற்று கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இது குறித்து அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கருத்துத் தெரிவிக்கையில்;

சனநாயகத்துக்கு விரோதமான முறையில் தற்போதைய அரசாங்கத்தைக் கலைக்க முற்படும் எந்தவொரு சக்தியையும் மக்கள் அங்கீகரிக்க மாட்டார்கள்.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்து ஓராண்டைப் பூர்த்தி செய்வதற்கு முன்பதாகவே மக்கள் அதற்கு எதிராக கிளர்ந்தெழுந்தனர்.

அந்த அரசாங்கத்தின் குறைபாடுகளை நீக்க முடியாத நிலையில் பல அமைச்சர்கள் அதனை

(6ம் பக்கம் பார்க்க)

## மர்மமான காரணத்திற்காக தனது பெயர் பிரஸ்தாபிப்பாம்

### லக்ஸ்மன் கதிர்காமர் கூறுகிறார்

(கொழும்பு)

ஏதோவொரு மர்மமான காரணத்திற்காக தனது பெயர், அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான சதித்திட்டம் தொடர்பான விடயத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை நீக்கி விட்டு லக்ஸ்மன் கதிர்காமர் தலைமையில் அரசாங்கம் ஒன்றை அமைக்க சதித்திட்டம் தீட்டப்பட்டு வருவதாக நேற்று முன்தினம் அரசாங்கம் விடுத்த அறிவிப்பு தொடர்பாகவே கதிர்காமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது; எனது பெயர் அங்கீகாரம் இன்றி ஏதோ ஒரு மர்மமான காரணத்திற்காக தெரிவிக்கப் பட்டிருக்கிறது. இந்த விடயம் பற்றிய கதை முழுவதும் ஒரு ஆவணத்தின் அடிப்படையில் எழுந்த வதந்தியாகும் என்றார்.

### படையினரால் கைதாகி

## காணாமல் போனோரின் உறவினர் தொடர் போராட்டம் நடத்த முடிவு

வடக்கில் கைது செய்யப்பட்டு காணாமல் போனோரின் பாதுகாவலர் சங்கம் யாழ். அரசசெயலகம் முன்பாக தொடர்ச்சியான மறியலில் ஈடுபடத் தீர்மானித்துள்ளது.

அரசு இது விடயத்தில் நடவடிக்கை எடுக்காது விட்டுள் ளதை ஆட்சேபித்தே இந்த மறியல் போராட்டம் இடம் பெறவுள்ளது.

மேற்படி சங்கத்தின் கலந்துரையாடல் நேற்று முன் தினம் யாழ். முனியப்பர் கோவில் முன்றலில் இடம்பெற்ற போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் எப்போது இடம்பெறும் என்பது குறித்த அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் எனவும் சங்க பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

## அனுரா தெரிவித்த குற்றச்சாட்டுக்கு விளக்கம் கோருகிறது அமெரிக்கா

(கொழும்பு)

அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ .புஷ் பற்றி பொதுசன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினரும் சனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகருமான அனுரா பண்டாரநாயக்க தெரிவித்த கருத்துக்கள், குற்றச்சாட்டுக்கள் குறித்து அமெரிக்க தூதரகம் அவரிடம் விளக்கம் கோரியுள்ளது.

சில தினங்களுக்கு முன்பு அம்பாறையில் நடைபெற்ற பேரணி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அனுரா பண்டாரநாயக்க, அங்கு பேசும் போது ; ஓசாமா பின்லேடனை தேடி ஆப்கானிஸ்தானைத் தரைமட்டமாக்கியும் அவரை பிடிக்கமுடியாதவரான அமெரிக்க சனாதிபதி புஷ் சிறிலங்காபிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உதவி புரிய முன் வந்திருப்பது கேலிக்கிடமா

(6ம் பக்கம் பார்க்க)



படம் : சபேஸ்

## எரு ஏற்றி வந்த பாரஊர்தி மரப்பாலத்தில் குடைசாய்ந்தது

புதுக்குடியிருப்பு கேப்பாப்பிலவு ஊடான முள்ளியவளை வீதியில் உள்ள மரப்பாலத்தில் எருவுடன் வந்த பாரஊர்தி ஒன்று விபத்துக்குள்ளாகி குடைசாய்ந்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு முள்ளியவளையில் இருந்து எரு ஏற்றி வந்த பார்ஊர்தியே மரப் பாலத்தை கடக்கும் வேளையில் விபத்துக்குள்ளாகி சேதமடைந் துள்ளது.

விபத்துக்குள்ளாகிய 27 சிறி 4954 இலக்க பாரஊர்தியில் பயணம் செய்தவர்கள் பாதிப்பு எதுவுமின்றி தப்பி உள்ளனர்.

(6ம் பக்கம் பார்க்க)

## மன்னார் - மடுவீதி மீண்டும் திறப்பு

(மன்னார்)

மன்னார் - மடுவீதி நேற்று மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. கடந்த இருபது ஆண்டு காலமாக மூடப்பட்டிருந்த இவ்வீதி மடு யாத்திரையை மேற்கொள்ளுபவர்களின் வசதிக்காகவே திறக்கப்பட்டுள்ளது.

இவ்வீதி காலை 6.30 மணி தொடக்கம் இரவு 6.30 மணி வரை திறக்கப்பட்டிருக்கும்.

# பலநூறு வருடங்களுக்கு முன்பிருந்ததுபோன்று தமிழர் தமக்குரித்தான பிரதேசங்களை ஆளுவதில் தவறில்லை

**தென்பகுதியிலிருந்து வெளியாகும் 'ஹரய' சிங்களப் பத்திரிகையின் சிறப்புச் செய்தி ஆசிரியர் ரணத்குமாரசிங்க அண்மையில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்திருந்தபோது எமது செய்தியாளரும், மொழி பெயர்ப்பாளருமான ஜெனனுக்கு வழங்கிய பேட்டி.**

தென்பகுதிப் பத்திரிகைகள் சமாதானம் என்பதுபோல் பேசுவதெல்லாம் பொய். தென்பகுதிச் சிங்களவருக்கு இங்குள்ள பிரச்சினைகள் பற்றித் தெரியாது. அவை தெளிவாக்கப்படுவதுமில்லை. மாறாக புலிகள் யுத்தத்துக்கு ஆயத்தமாகிறார்கள், பயிற்சி செய்கிறார்கள் ஆயுதங்களைச் சேர்க்கிறார்கள், சிறு பிள்ளைகளை யுத்தத்தில் இணைக் கிறார்கள் என்பதுபோன்ற செய்தி களை வெளியிட்டு அவர்களைக் குழப்பிக் கொண்டிருப்பது பத்திரிகைகளின் வேலை. சிங்கள மக் களின் உரிமைகளை மேம்படுத்தி, இனபேதங்களை உருவாக்கும் செய்திகளை வெளியிடுவதாலும் பத்திரிகைகளின் வருவாயை வியாபார ரீதியில் பெருக்கிக் கொள்கின்றனர்.

இவ்வாறு தென்பகுதி சிங்களப் பத்திரிகையான ஹரய வின் சிறப்புச் செய்தி ஆசிரியர் ரணத்குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில் சிறிலங்கா அரசாங்கத்தினதும் ராணுவத் தலைமைப் பீடங்களின் மட்டத்திலும் எழுந்துள்ள கருத்து யுத்தத்தை நடத்த முடியாதென்பதே.

ராணுவத்தின் மனோதிடம் குறைந்துவிட்டதாகவும் கருதுகின்றனர். கடந்த மூன்று, நான்கு வருடங்களில் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட யுத்த முனைப்பும், ராணுவத்திற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளும் வெற்றியளிக்கவில்லை. புதியவர்களும் சிறிதளவே உள்ளனர். 30 வயதுக்குக் கிட்டியவர்கள் தான் அதிகமானளவில் உள்ளனர். இளைஞர் மட்டத்தில் அவை உணரப்படுவதாயில்லை ராணுவத்திலுள்ள அநேகம் பேர் குறைந்த சம்பளத்தில் வேறு தொழில் கிடைத்தாலும் போதுமென்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என ராணுவத்தின் நிலைப்பாடு குறித்து மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

தென்னிலங்கையில் இனவாதத்தைக் கிளறிவிடும் சக்திகளாக ஜே.வி.பி.யுடன் மற்றய பல கட்சிகளும் இயங்கி வருகின்றன.

அனுரா பண்டாரநாயக்காவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவுக்குமிடையே உருவாகி வரும் முரண்பாடுகளுக்கிடையே ஜே.வி.பி.யின் பலத்தைத் தனக்கு சாதகமாக்கிக் கொண்டு இனபேத மோதல்களுடன் தலைவராக வருவதற்கு அனுரா முயன்று வருகிறார். மகிந்த ராஜபக்ச அதற்கு மாறாக வேறு திட்டங்களுடன் தலைவராக நிலைக்க முற்படும் இவ்வேளையில் சந்திரிகா குமாரதுங்க பைத்தியக்கார நடவடிக்கைகளிலும் சமய சந்தர்ப்பம் தவறும் கூற்றுக்களாலும், நாட்டு மக்களின் பரிகசிக்கத்தக்க விமர்சனங்களுக்கும் ஆளாகிவரும் அரசியல் நாடகம் அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தெவுந்தர தொடக்கம் காங்கேசன்துறைவரைக்கும் சிங்களவரின் நாடு என்ற சித்தாந்தம் சிங்கள மக்களிடையே நீண்டகாலங்களாக வேரூன்றியிருக்கும் நிலையில் சிறிலங்காவின் ஒரு பகுதியைத் தமிழர் வசம் ஒப்படைத்துவிடுவார்களோ என்ற பயமும் அதையிட்டுக் குரலெழுப்புவதும் பழக்கமாகிவிட்டது. நாட்டின் சகல செல்வங்களும் அவர்களுக்கே சொந்தமானவை என்ற நோக்கிலும் பார்ப்பதில்தான் தவறு நடந்து கொண்டிருக்கிறது.

ஆதியில் சிங்களவர் என்ற இனம் இருந்ததில்லை. அவர்கள் அரச பரம்பரையைச் சேர்ந்தவர்கள் எனச் சொல்லிக்கொள்கின்றனர். அரச பரம்பரையைச் சேர்ந்தவர் எவராய் இருந்தாலும் ஆட்சிப் பீடம் ஏறுவர். பொலனறுவை வரலாற்றைப் பார்த்தால் பராக்கிரமபாகு அரசனின் பின் வந்த அரசர்களெல்லாம் சிங்களப் பெயர்களில் அரசாட்சிசெய்தவர்கள் தான். உண்மையில் அவர்கள் தென்னிந்தியாவிலிருந்து வந்த தமிழ் மன்னர் கள் சிங்களப் பெயர்களில் ஆட்சி செய்தவர்கள் பல நூறு வருடங்களுக்கு முன் சிங்களவர் சிங்கள வருக்கேயுரிய பிரதேசங்களிலும், தமிழர் தமிழருக்கேயுரிய பிரதேசங்களிலும் ஆட்சி செய்து வாழ்ந்து வந்தது போல தமிழர், தமிழர் வாழ் பிரதேசங்களை ஆட்சிசெய்வதற்கு இடமளிப்பதில் தவறில்லை.

இலங்கையில் முதலாளி வர்க்கமென்பது அதிகமாக முன்னேற்றம் அடையவில்லை. தொழில்வளம், தொழிற்சாலைகளும் அதிகமில்லை. நாட்டில் தொழில் வளம், செல்வம் அதிகமாக இருக்குமானால் இந்த இனபேதங்களெதுவும் இருக்கமுடியாது. இப்படியானவர்கள் தமிழர் நிலங்களை அபகரிப்பதும், வியாபாரங்களைக் கைப்பற்றுவதும் அவர்களை ஓரம்கட்ட நினைப்பதும் இறுதியில் அவர்களின் சொத்துக்களுக்குத் தீ வைப்பதும் தான் மிஞ்சுகிறது. கந்தளாய், திருகோணமலை போன்ற தமிழர் இடங்களில் சிங்களவரைக் குடியேற்றியுள்ளமையும் தமிழர் நிலங்களைச் சூறையாடியுள்ளமையும் இதற்கு ஒரு உதாரணமாகும்.

1976ஆம் ஆண்டு ஜே.வி.பி.யினர் வெளியே வந்த பின் லெனின் சித்தாந்தங்களுடன் செயற்பட ஆரம்பித்தனர். தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்ற கொள்கை செயலாளர் மட்டத்தில் இருந்தாலும், கட்சி அமைப்புக் கொள்கைகள் அப்போதிருந்தே தமிழர்க்கெதிரானதாயிருந்தது. ஜே.வி.பி.க்கு பல்கலைக்கழக மாணவர்களின் பின்னணியும் ஆதர வும் பலமாக உண்டு அவை கிளர்ச் சிப் போக்குகளைக்கொண்டிருக்கின்றன. என அவர் மேலும் கூறினார்.


## சம்பளம் வழங்கல்

பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன ஊழியர்களின் சம்பளம் 06-08-2002இல் இருந்து 08-08-2002வரை றம்மியா மைதிலி களஞ்சியத்தில் வழங்கப்படும்.

கா. சிவபாதசுந்தரம்
தொழில் முகாமையாளர்

(2312)

வடக்கு- கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் கீழ் வாகனசாரதிகளுக்கான

## விண்ணப்பம் கோரல்

வடக்கு, கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்ட நியாப் திட்ட அலுவலகத்துக்கான, சாரதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி தற்காலியமானதும் முதலில் ஒருவருடத் துக்கு நியமனம் வழங்கப்பட்டு பின்பு சேவை ஒழுக்கம் வரவு திருப்திகரமானது - எனில் மேலும் நீடிப்பு வழங்கப்படும்.

தகைமைகள்:

() கல்வித் தகைமை க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்து இருத்தல்.

() தொழில் தகைமை இலகு பாரவாகனங்களை செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் தொழில் அனுபவம் ஆகக் குறைந்தது மூன்று வருட சாரதி அனுபவம்.

() வயதெல்லை ஆகக் குறைந்தது 22வயது, ஆகக் கூடியது 45வயது (அரச உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வயது எல்லை இல்லை)

() சம்பளம் ரூபா 3765, மாதம் இடைக்காலப் படியும் திருப்திகரமான சேவை செய்யும் இடத்தில் முகாமைத்துவ சுற்று நிரூபம் இலக்கம் பத்தின் பிரகாரம் சம்பளம் மாற்றியமைக்கப்படும்.

() விண்ணப்பங்கள் யாவும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்து அனுப்பி வைக்கப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'சாரதிகளுக்கான விண்ணப்பம்' எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு அரசாங்க அதிபர், மாவட்ட திட்டமிடல் செயலகம், கச்சேரி, முல்லைத்தீவு. என்னும் விலாசத்திற்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ 20-08-2002க்கு முன்பதாக அனுப்பி வைக்கவும்.

(சி-7026)

## கேள்வி அறிவித்தல்

முல்லைத்தீவு கல்வி வலயப் பாடசாலைகளுக்கான உருக்கு மரத்தளபாடங்கள் விநியோகத்திற்கான கேள்விப் பத்திரங்கள் கோரல்

**வன்னி. புனர்வாழ்வளிப்புக்கு துணைபுரியும் அமைச்சு நிதி ஒதுக்கீடு 2002**

(1) கீழ்க் குறிப்பிடப்பட்ட வகையான தளபாடங்களுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.
1. C வகை மாணவர் மேசை
2. C வகை மாணவர் கதிரை

(2) விண்ணப்பப்படிவங்கள் மு./சிறிசுப்பிரமணிய வித்தியாலயத்தில் அமைந்துள்ள முல்லைத்தீவு வலயக் கல்விக் கணக்குப் பகுதி காரியாலயத்தில் 06-08-2002 திகதி முதல் 09-08-2002 பி. ப. 2.00 மணிவரைபெற்றுக் கொள்ளலாம். திட்டவிபரங்களையும் வரை படங்களையும் மற்றும் விபரங்களையும் மிளளிப்பு செய்ய முடியாத வைப்புத்தொகையான ரூபா 250 செலுத்தியதுக்கான பற்றுச் சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம். பற்றுச் சீட்டானது முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிமனையில் மேற்படி தொகையைச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

(3) 9x4 இஞ்சி அளவுள்ள காகித உறையில் இடது மேல் மூலையில் முல்லைத்தீவு கல்வி வலய பாடசாலைக்கான உருக்கு மரத் தளபாடங் கள் விநியோகித்தலுக்கான கேள்விப் பத்திரம் 'புதுக்குடியிருப்பு கரை துறைப்பற்று செயலாளர்கள் பிரிவு' என எழுதப்பட்டு இரு பிரதிகளினால் ஆன விண்ணப்பப்படிவங்கள் காகித உறையிட்டு அரசு முத்திரை இடப்படவேண்டும்.

(4) அரசு முத்திரை இடப்பட்ட கேள்விப் பத்திர உறை பதிவுத் தபாலில் வலயக் கல்விப்பணிப்பாளர், வலயக் கலிவிப்பணிமனை, முல்லைத்தீவு. முகவரிக்கு 13.08.2002 காலை 10.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அல்லது மு.சிறிசுப்பிரமணிய வித்தியாலயத்தில் அமைந்துள்ள முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனையில் உள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் இடவேண்டும். கேள்விப் பத்திரங்கள் அதே நாளில் 10.30 மணிக்கு திறக்கப்படும்.

(5) குறிப்பிட்ட வேலையின் தரமும், அளவு பாடசாலை வேலை பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பிரமாணங்களுக்கும் திட்டவரை படங்களுக்கும் அமைவானதாக இருக்க வேண்டும்.

(6) விநியோகம் கட்டளையிடப்பட்ட தினத்திலிருந்து 45 நாட்களுக்குள் நிறைவு செய்ய வேண்டும்.

(7) பின்வரும் பாடசாலைகளுக்கு மேற்படி விநியோகம் செய்யப்பட வேண்டும்.
1. வேணாவில் முருகானந்தா வித்தியாலயம்
2. மு./கைவேலி கணேசா வித்தியாலயம்.
3. மு./தேவிபுரம் அ.த.க.பாடசாலை.
4. மு./மந்துவில் அரசரத்தின வித்தியாலயம்.
5. மு./சுதந்திரபுரம் அ.த.க.பாடசாலை.
6. மு./முல்லைத்தீவு இ.த.க.பாடசாலை.
7. மு./சிலாவத்தை இ.த.க.பாடசாலை.
8. மு./உடுப்புக்குளம் அ.த.க.பாடசாலை.
9. மு./முள்ளியவளை றோ.க.பாடசாலை.
10. மு./முள்ளியவளை அ.த.க.பாடசாலை.

(8) கேள்வி விண்ணபத்தில் உள்ளவாறு விலைக்கூறு தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். (ஒரு அலகுக்கான விலை போக்குவரத்துக் கட்டணத்துடன்)

(9) கேள்விக்கான முழு விநியோகமும் செய்து முடிக்கும் வரை எந்த வித நிபந்தனையிலும் சேர்த்துக்கொள்ளப்பட்ட விலைக்கூற்றில் மாற்றம் செய்ய முடியாது.


(10) உரிய பாடசாலைகளுக்கான தளபாட விநியோகம் செய்து உரிய ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்பே கொடுப்பனவு வழங்கப்படும்.

(11) தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் வழங்கப்பட்ட விலையின் பெறுமதியின் 2.5 வீதம் PERFORMALCE BOLD எமது அலுவலகத்தில் வைப்புச் செய்தல் வேண்டும். அல்லது அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் இருந்து பெறப்பட்ட பிணை முறியை சமர்ப்பித்தல் வேண்டும்.

க.வே.பாலசிங்கம்,
வலயக் கல்விப்பணிப்பாளருக்காக,
முல்லைத்தீவு.

(சி-7029)

# அமெ. வின் ஈராக் மீதான தாக்குதலை ஈரானும், சவுதியும் எதிர்க்கும்



(பக்தாத்)

ஈராக் மீது நடைபெறும் எந்தவொரு அமெரிக்க தாக்குதலையும் எதிர்ப்பதாக ஈரானும், சவுதியரேபியாவும் கூறியுள்ளன. சவுதிஅரேபிய வெளிவிவகார அமைச்சர் இளவரசர் பவுட் அல் பைஸ் அல் ஒரு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஈரான் சென்றுள்ளார்.

ஈராக் மீதான அமெரிக்க தாக்குதலை எதிர்ப்பதாக, சவுதியின் முடிக்குரிய இளவரசர் அப்துல்லாவின் செய்தியை ஈரானிய சனாதிபதி முகமட்கட்டாமியிடம் கையளிக்கயிருப்பதாக சவுதி அரேபிய வெளிவிவகார அமைச்சர் ஊடகவியலாளரிடம் கூறினார். தொடர்ந்து தொலைக் காட்சிக்கு பேட்டி அளித்த போது ஈராக் மீதான அமெரிக்க தாக்குதலை எதிர்க்கும் விடயத்தில் சவுதியரேபியாவும் ஈரானும் ஒருமித்த கருத்தை கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

## ஐ. நா. வின் ஆயுதப்பரிசோதனைக்கு ஈராக் அனுமதி

இதே வேளை 1998முதல் ஈராக்கிக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டிருந்த ஐ.நா.வின் ஆயுதபரிசோதகர்களையும் மீண்டும் நாட்டுக்குள் அனுமதிக்க ஈராக் முன்வந்துள்ளதை வரவேற்பதாக சவுதி வெளிவிவகார அமைச்சர் மேலும் கூறினார்.


இதேவேளை தமது நாட்டில் ஆயுத சோதனையை மேற்கொள்வது தொடர்பான கலந்துரையாடலுக்கு வருமாறு ஈராக் விடுத்த அழைப்பை ஐ.நா.சபை வரவேற்றுள்ளது. எனினும் முழுமையான அதிகாரத்துடன் கூடிய ஆயுத சோதனைகளுக்கு இடமளிக்க வேண்டும் என்பதே அமெரிக்காவின் வேண்டுகோளாகும்.

ஈராக் சனாதிபதி சதாம் ஹுசையினை பதவியிலிருந்து நீக்கும் தமது குறிக்கோளில் ஈராக்கின் இவ்வழைப்பு மூலம் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்தாது என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஸ் கோடைகால விடுமுறையை கழிக்கும் பொருட்டு புறப்பட்ட நிலையிலேயே ஆயுத சோதனை களுக்கான அழைப்பை ஈராக் விடுத்திருந்தது.

1991ஆம் ஆண்டு வளைகுடா யுத்தம் முடிவடைந்த சந்தர்ப்பத்தில் ஐக்கிய நாடுகளின் ஆயுத சோதனைக் குழுவினர் ஈராக்கினுள் நுழைந்துள்ளனர்.

பின்னர் தொடர்ந்து ஏழு ஆண்டுகளாக தமது நடவடிக்கையை மேற்கொண்ட ஆயுத சோதனைக்குழுவினர் ஏராளமான உயிரியல் மற்றும் அணுவாயுதங்களை அளித்தனர். எனினும் இவர்களின் அமெரிக்க சார்புக் கொள்கையை காரணம் காட்டி 1998ஆம் ஆண்டு டிசம்பரில் இவர்களை ஈராக் வெளியேற்றியது.



அதன்பின்னர் இன்றுவரை எந்தவொரு சர்வதேச ஆயுத சோதனைக் குழுவும் ஈராக்கினுள் அனுமதிக்கப் படவில்லை. இந்நிலையில் ஈராக் கின் இவ்வழைப்பு சனாதிபதி சதாமை பதவியில் இருந்து நீக்கும் தமது கொள்கையில் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்தாது என அமெரிக்க அமைச்சரவை உறுப்பி னர்களில் ஒருவரான ஜான் போல்டன் தெரிவித்துள்ளார்.

## தாக்குதல் இலக்காக பழைய போர்க்கப்பல்கள்

(லண்டன்)

இரண்டாயிரத்து எண்ணூறு கோடி ரூபா மதிப்புள்ள இரு போர்க்கப்பல்களைப் பிரிட்டன் ஏவுகணைப் பயிற்சிக்கு தாக்குதல் இலக்காகப் பயன்படுத்தவுள்ளது.

பிரிட்டன் கடற்படைக்குச் சொந்தமான பாக்சர் மற்றும் பிரேவ் என்ற இரு போர்க்கப்பல்களே ஏவுகணை இலக்குகளாக உள்ளன. இந்த இரு கப்பல்களும் முறையே 1980 ஆம் 1982ஆம் ஆண்டுகளில் தயாரிக்கப்பட்டவை ஆகும்.

தற்போது போர்முறை மாறியுள்ள நிலையில், பயனற்ற இந்தக் கப்பல்களை விற்க, பிரிட்டன் முடிவு செய்தது. ஆனால், எந்தவொருநாடும் இவ்விரு கப்பல்களையும் வாங்குவதற்கு முன்வராத நிலை யில் இக்கப்பல்களை போர்ப் பயிற்சியில் தாக்குதல் இலக்குகளாகப் பயன்படுத்த பிரிட்டன் முடிவு செய்துள்ளது.

ரஷ்யா- மேற்கு நாடுகளின் 'பனிப்போர்' உச்சக்கட்டத்தில் இருந்த வேளை, நீர்மூழ்கிக் கப்பல்களின் தாக்குதல்களை முறியடிக்க பிரிட்டன் இந்த இரு கப்பல்களையும் பயன்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

## ஈராக்கைத் தாக்க அமெ. திட்டமிடுவது புத்திசாலித்தனமானதல்ல

### ஐ. நா. செயலர் கோபி அனான் தெரிவிப்பு

ஈராக் சனாதிபதி சதாம் ஹூசைனைப் பதவி நீக்குவதற் காக அந்நாட்டின் மீது இராணுவத் தாக்குதல் நடத்த அமெரிக்கா திட்டமிடுவது புத்திசாலித்தனமானதொரு விடயமல்ல. இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபிஅனான் தெரிவித்துள்ளதாக அல்-ஹயத் என்ற அரபு மொழிப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கோபி அனான் மேலும் தெரிவித்துள்ளதாக அச்செய்தியில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

ஈராக் தொடர்பான என்னுடைய நிலைப்பாட்டில் எந்தவொரு மாற்றமும் இல்லை. இது தொடர்பாக இதற்கு முன்னரும் நான் பல தடவைகள் கருத்துத் தெரிவித்துள்ளேன்.

அத்துடன், ஐக்கிய நாடுகள் சபையின் கொள்கையும், அமெரிக்காவின் கொள்கையும் வேறுபட்ட இரண்டு விடயங்கள் ஆகும். ஈராக்கிற்கு எதிராக இராணுவ நடவடிக்கை எதையும் எடுப்பதற்கு ஐ.நா.திட்டமிடவில்லை. அதேபோல, ஈராக் தலைநகரம் பாக்தாத்துக்கு செல்லும் திட்டங்கள் எதுவும் தற்போதைக்கு இல்லை என்றும் கோபிஅனான் கூறியதாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## கொரியாக்கள் இணைவதற்கெதிராக அமெ. செயற்படுவதாக குற்றச்சாட்டு

அமெரிக்க வெளிநாட்டமைச்சர் கொலின்பவலுக்கும் வட கொரிய இராஜ தந்திரியொருவருக்குமிடையில் நடைபெற இருந்த சந்திப்பைத் தவிர்த்திருக்கின்ற வட கொரிய அரசு அமெரிக்காவை தீமையின் முக்கிய புள்ளி என்று விமர்சித்துள்ளது.

புருணையில் நடைபெற்ற 'ஆசியான்' அமைப்பின் வெளிநாட்டமைச்சர்கள் மாநாட்டில், பவலும் வடகொரிய வெளிநாட்டமைச்சர் பீக்நாம் சுன்னும் உத்தியோகப்பற்றற்ற முறையில் உரையாடி, சிலமணி நேரங்களின் பின்னர் வடகொரியா இப்படியானதொரு அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, அமெரிக்கா, வலிய சண்டைக்குப் போகும் நாடு என்றும் யுத்தத்தை முதலில் தொடங்குவதன் மூலம் தீமையின் முக்கிய புள்ளியாகச் செயற்படுகிறது என்றும் வட கொரியா அரசாங்கத்தின் பத்திரிகையில் எழுதப் பட்டிருப்பதுடன், கொரிய குடா வில் சமாதானம் ஏற்படுவதற் கெதிராகவும் இரு கொரியாக்கள் இணைவதற்கெதிராக செயற்படு வதாகவும் கண்டனம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும், உண்மையிலேயே கொரிய குடாவில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அமெரிக்கா விரும்பினால் தென் கொரியாவில் சட்டவிரோதமாக நிலை கொண்டிருக்கும் படையினரை விரைவாக அமெரிக்கா வாபஸ் பெற வேண்டும் என்றும் அப்பத்திரிகை வலியுறுத்தியுள்ளது.

## சிறிலங்காவிற்கு வெற்றி

பங்களாதேஷ்க்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் சிறிலங்கா அணி எட்டு விக்கெற்றுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் ஆடிய பங்களாதேஷ் 30.1 ஓவரில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 76 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. பதிலுக்கு ஆடிய சிறிலங்கா 11.4 ஓவரில் வெற்றி இலக்கை அடைந்தது. மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில் நடைபெற்ற இரு போட்டிகளிலும் பங்களாதேஷ் தோல்வி கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்நிய மண்ணில் தொடர் தோல்விகளை கண்டு வந்த சிறிலங்கா அணிக்கு மேற்படி வெற்றிகள் தென்பாக அமைந்துள்ளன.


## 5500 மாணவர்கள் பங்கேற்பர்!

14ஆவது மெய்வன்மை போட்டிகளுக்கான ஆரம்ப வைபவத்தில் 5500 பாடசாலை மாணவர்கள் பாண்ட் வாத்திய நிகழ்ச்சியில் ஈடுபடுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சிறிலங்கா ராணுவம், கடற்படை, விமானப் படை, பொலிஸ் பாண்ட் வாத்தியக் குழுக்களும் இந் நிகழ்ச்சியில் பங்கு பற்றவுள்ளன.




## சாதனைகள் படைக்கும் முரளி



சிறிலங்கா அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் ஒரு நாள் சர்வதேச போட்டியில் 278 விக்கற்றுக்களை வீழ்த்தி அதி கூடிய விக்கற்றுக்களை வீழ்த்தியோரில் நான்காவது இடத்தைப் பெற்றுள்ளார்.

நேற்று முன் தினம் பங்களாதேஷ் அணியுடனான ஒருநாள் போட்டியின்போது அவுஸ்திரேலியா சுழற்பந்து வீச்சாளர் ஷேன்வோர்னின் 278 விக்கற் என்ற சாதனையை சமப் படுத்தி முரளி நர்ன்காம் இடத்தைப் பிடித்தார்.

இதன் மூலம் ஒரு நாள் போட்டியிலும் முரளிதரன் அதிக விக்கற்றுக்களை வீழ்த்தி சாதனை படைப்பார் என தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் அதிகூடிய விக்கற்றுக்களை வீழ்த்தியோரில் பாகிஸ்தானின் வசீம் அக்ரம், வக்கார்யூனிஸ், இந்தியாவின் அனில் கும்ளே ஆகியோர் முறையே முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களை வகிப்பது குறிப்பிடத்தக்கது

## பத்து வெற்றிகளை பெற்று அவுஸ்திரேலியா வீரர் சாதனை!

(லண்டன்)

இங்கிலாந்து மான்செஸ்டரில் நடைபெற்று முடிந்த 17வது பொதுநலவாய விளையாட்டு போட்டியின் பத்து வெற்றிகளைப் பெற்று அவுஸ்திரேலிய நீச்சல் வீரர் இயன்போத் சாதனை படைத்துள்ளார். இதுவரை நடைபெற்ற போட்டிகளில் இதுவே முதல் தடவையாகும்.

இதேவேளை தென்னாபிரிக்க நீச்சல் வீராங்கனையான லட்டாலி ரூடோய் என்பவர் மிகச் சிறந்த மெய்வன்மை வீராங்கனை என்ற விருதை பெற்றுள்ளார்.

## சூத்திரதாரி பின்லேடனல்லவாம்

(இஸ்லாமாபாத்)

அமெரிக்க நகரங்கள் மீது செப்டம்பர் 11ம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலின் சூத்திரதாரி ஓசாமா பின்லேடன் என்ற கருத்தை பாகிஸ்தான் அதிபர் முசாரவ் மறுத்துள்ளார்.

பின்லேடன் இதற்கு நிதியுதவி வழங்கியிருக்கலாம் அல்லது ஊக்கம் அளித்து இருக்கலாம். ஆனால் இந்த தாக்குதலை நடத்தியவர்கள் நவீன உத்தியையே பயன்படுத்தியிருக்கின்றார்கள் என்று அமெரிக்க சஞ்சிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் சனாதிபதி முசாரப்பின் இக் கருத்தின் மூலம் "செப்டெம்பர் 11" தாக்குதல் சூத்திரதாரி குறித்த அமெரிக்காவின் முடிவை ஏற்றுக்கொள்ள முசாரப் மறுத்துள்ளதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

# கிளி. வைத்தியசாலை புனரமைப்பு தாமதமின்றி செய்ய வேண்டிய பணி

ஓயாத அலைகள் இரண்டின் மூலம் கிளிநொச்சி நகரையும் ஓயாத அலைகள் 3இன் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தையும் தமிழீழ விடுதலைப்புலிகள் முற்று முழுதாக தமது கட்டுப்பாட்டிற்கு கொண்டு வந்ததையடுத்து, சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பால் சின்னாபின்னம் ஆக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் மெல்ல மெல்ல குடியேறத் தொடங்கினர்.

இன்று அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்பு ஏ-9 வீதியிலுள்ள முக்கிய மாவட்டங்களில் ஒன்றாக கிளிநொச்சி மாறியுள்ளது. இதன் வாயிலாக மீண்டும் கிளிநொச்சி மாவட்டம் மக்களின் மீளக் குடியேற்றம், மற்றும் அவர்களின் பல்வேறு செயற்பாடுகளால் களைகட்டத் தொடங்கியுள்ளது.

இக் கிளிநொச்சி மாவட்டம் சிறிலங்காவில் இறுதியாக உருவாக்கப்பட்ட இருபத்தைந்தாவது மாவட்டம் ஆகும். அத்துடன் சிறிலங்காவில் அன்று தொட்டு இன்றுவரை அரசின் கணிப்பீட்டில் பின்தங்கிய மாவட்டமாகவே இருக்கிறது.

இம் மாவட்ட மக்களின் பிரதான தொழிலாக விவசாயமும், மீன்பிடியும், குறிப்பிடத்தக்க சிலர் வர்த்தகத்திலும் ஈடுபடுகிறார்கள். பல இன்னல்கள் மத்தியில் இயங்கிக் கொண்டிருக்கும் இம் மாவட்டத்தில் அரசின் கவனம் அன்று தொட்டு இன்று வரை பெயரளவில் தான் இருந்து வருகிறது. எனினும் இம்மக்களின் அயராத உழைப்பால் ஓரளவு முன்னேறி வரும்வேளையில் சிறிலங்கா அரசின் காலகாலமாக நடைபெறும் ஆக்கிரமிப்பால் அடிக்கடி அழிவுக்கு உள்ளாகியது.

எனினும் 1996ஆம் ஆண்டு புரட்டாதி 18ம் திகதி மேற்கொள்ளப்பட்ட "சத்ஜெய" நடவடிக்கையால் கிளிநொச்சி மாவட்டத்தின் நகர்ப்பகுதியை சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்து துவம்சம் செய்ததால், இம் மக்களின் அத்தியாவசியச் சேவைகள் பல அழிக்கப்பட்டன. அவற்றிலும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை ஆக்கிரமிப்புக் குள்ளாகியது. 1996ம் ஆண்டு பிற்பகுதி தொடக்கம் இன்று வரை எதுவித அடிப்படை வசதியுமின்றி அக்கராயன் பகுதியில் இயங்குகிறது.

இங்கு போதியளவு வைத்தியர்கள், தாதிகள், மற்றும் இதர வைத்திய ஊழியர் பற்றாக்குறையுடன் இயங்குகிறது. இதைவிட கட்டட வசதி, தளபாட வசதி, நோயாளிகளுக்கு வழங்க போதுமான மருந்துகள் இன்றி மிக மோசமான நிலையில் இயங்குகிறது.

இதனால் ஆண்டு தோறும் குழந்தைகளின் இறப்பும், கர்ப்பிணித் தாய்மாரின் இறப்பும் அதிகரித்த வண்ணமே செல்கிறது. ஒரு மாவட்ட வைத்தியசாலை உரிய தளபாட, கட்டட வசதியின்மை, வைத்தியர்கள், ஊழியர்கள் பற்றாக்குறை அடிக்கடி ஏற்படும் மருந்துப் பொருட்கள் பற்றாக்குறை என்பவற்றால் "தாய் -சேய்" இறப்பு அதிகளவு

**த. சத்தியன்.**

ஏற்படுகிறது எனின் மிகுதி வசதியின்மைகளுக்கு வார்த்தைகள் மூலம் வரிவடிவம் வழங்கவேண்டிய அவசியமில்லை.

புரிந்துணர்வு உடன் படிக்கை ஏற்பட்ட பின்பு தென்பகுதியிலிருந்து வரும் அமைச்சர்கள், அரசியல்வாதி களாகவே நடந்து கொள்கிறார்களே தவிர, ஆக்கபூர்வமாக எதனையும் செய்யவில்லை.

தென்பகுதி மாணவர்களுடன் வந்தவொரு அமைச்சர் கிளி. மாவட்ட மாணவர்களுக்கு என வழங்கிய உடுப்பு பொதிகள் அவர்கள் உடுத்து கழித்து இனி உடுப்பதற்கு இயலாதவையாக இருந்தன. அவற்றை அழகாகப் பொதி செய்து கையளித்துவிட்டு சென்றனர்.

இதேபோல இன்னுமோர் அமைச்சர் சில நூறு அப்பியாசக் கொப்பிகளை ஏ-9 வீதிவழியாக செல்கையில் கிள்ளி வழங்கினார். ஒரு அமைச்சரால் ஒரு சில நூறு அப்பியாசக் கொப்பிகளைத் தான் கிளி மாவட்ட மாணவர்களுக்கு வழங்க முடிந்தது என்றால் அது வியப்பான ஒன்றல்லவா?

ஆனால் அவ் அமைச்சர்களுக்கு கிளிநொச்சி மாவட்டத்தை பொறுத்தவரை பாரிய பணியொன்று உள்ளது. அதாவது முன்புபோல உரிய இடத்தில் எழுநூறு படுக்கை வசதிகளுடன் கிளிமாவட்ட வைத்தியசாலையை கட்டி வழங்க வேண்டிய பொறுப்பு உள்ளது. இவ் வைத்தியசாலை எவ்வாறு அழிந்து போனது என்பதை அவ் அமைச்சர்கள் அறிவர்.

ஆனால் இவ் வைத்தியசாலையை மீள் அமைக்க ஏழு லட்சம் ரூபாவை அரசாங்கம் வழங்கியுள்ளது. இத் தொகையைக் கொண்டு வைத்தியசாலைக்குரிய வேலியைக்கூட செப்பனிட முடியாது என கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி கவலை தெரிவித்துள்ளார்.

அண்மையில் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சனாதிபதி நிதியிலிருந்து இராணுவ மருத்துவ மனைகளில் சத்திரகூடப் பகுதிகளை நவீன மயப்படுத்த எழுபத்தெட்டு லட்சத்தை வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது "தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தான் தெரியும்".

எது எவ்வாறு இருந்தாலும் இவ் ஆயிரக் கணக்கான மக்களின் உயிர்களோடு மனிதாபிமானமற்ற முறையில் அரசு நடந்து கொள்வது அரசின் பெயருக்கே இழுக்கை ஏற்படுத்தும். ஏனெனில் உலகின் பல பாகங்களிலும் உள்ள பல தன்னார்வதொண்டு நிறுவனங்கள் இப்பணியை செய்யும்போது அரசின் இப் பாரபட்சம் அரசுக்கே இழுக்கை ஏற்படுத்தும்.

எனவே அரசு கிளிநொச்சியின் நகர்ப் பகுதியில் இராணுவ நடவடிக்கையால் தரைமட்டம் ஆக்கப்பட்ட மாவட்ட வைத்தியசாலையை துரிதமாக அமைத்து, மக்களுக்குரிய மருத்துவ வசதியை செய்து கொடுத்து கிளிநொச்சி மாவட்ட மக்களை வீணான உயிர் இழப்புகளிலிருந்து காப்பாற்ற வேண்டிய கடப்பாட்டை அரசு இனியும் காலம் தாழ்த்தாது செய்ய வேண்டும்.

---

## ஐ.தே.மு. அரசை தேர்தல் வைக்காது பதவியிறக்க பொ.ஐ.மு. விருப்பம்

(கொழும்பு)

பொ.ஐ.முன்னணி தற்போதிருக்கும் பொருளாதார நெருக்கடிகளிடையே 700தொடக்கம் 800மில்லியன் வரை செலவு செய்து புதிய தேர்தலொன்றை நடத்துவதற்குத் தயாராகவில்லை. என சிறிலங்கா சுதந்திரக் கட்சி பேச்சாளர் மங்கள சமரவீரா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற கருத்தரங்கின் போது பொ.ஐ. முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகமவும் பிரசன்ன மாயிருந்தார். அவர் கூறுகையில் மாற்று அரசாங்கம் அமைப்பதற்கு தேர்தல் இல்லாமல் வேறு வழிகள் இருக்கின்றன.

அரசாங்கத்தினுள்ளே பல சீர்கேடுகள் நிலவுவது வெளிப்படையானது. பாராளுமன்றத்திலுள்ள பின் ஆசனங்களி லுள்ளோர் தமது அதிருப்திகளை வெளியிடுவதன் மூலம் அரசாங்கத்தை விரைவில் அகற்றிவிட முடியும் எனவும் சரத் அமுனுகம கூறினார்.

## 15 வருட சேவையை பூர்த்தி செய்த மன்னார் மாவட்ட கி.சேவகர்களை பதவி உயர்த்த வாக்குறுதி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள தரம் II ஐச் சேர்ந்த பதினைந்து வருட கால சேவையைப் பூர்த்தி செய்த, அறுபத்து மூன்று கிராம அலுவலர்கள், நேர்முகப் பரீட்சை மூலம் தரம் I இற்கு பதவி உயர்வு செய்யப்படவுள்ளனர்.

இதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் பத்தாம் திகதி முதல் நடைபெறவுள்ளது. அத்தோடு, ஐந்து வருட காலத்தில் பெற்ற சம்பள உயர்வு, பாராட்டுக்கள் போன்றவை கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்றும் கூறப்படுகிறது.

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் இடம் பெற்ற உயர் அதிகாரிகளின் சந்திப்பில், மன்னார் மாவட்டப் பிரதிநிதி ஈ.கே.கே.மிரன்டா மேற்படி தரம் I இற்கான நேர்முகப் பரீட்சைகள் உடனடியாக நடத்தப்படவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் காலங்களில் சனிக்கிழமை அலுவலக நாளாக இருக்காது, காகிதாதி, சீருடை, சைக்கிள் கொடுப்பனவு போன்றவை அதிகரிக்கப்படும் என்று அமைச்சின் உயர் அதிகாரிகள் வாக்குறுதி அளித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

## தீவகம், வடமராட்சிப் பகுதிகளில் படையினர் பனை, தென்னைமரங்களை தறிக்கின்றனர்

### தற்போதும் இடம் பெறும் இந்நடவடிக்கை குறித்து மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் தீவகம் வடமராட்சியில் சிறிலங்கா படையினர் தொடர்ச்சியாக பனை, தென்னை போன்ற பயன்தரு மரங்களை தறித்து வருவதாக பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு பின்னரும் இந்த பகுதிகளில் புதிது புதிதாக காவலரண்களை அமைத்து வரும் படையினர் அதற்கென இந்த மரங்களை தறித்து வருகின்றனர்.

குறிப்பாக தீவகம் வல்வெட்டித்துறை, தொண்டமனாறு, கெருடாவில் பகுதிகளில் இத்தகைய நடவடிக்கையில் கடந்த சில நாட்களாக சிறிலங்காப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை சிறிலங்காப் படையினரிடம் இருந்த பொதுமக்களின் காணிகள் மற்றும் குடியிருப்புகளை தற்பொழுது கைவிடக்கூடிய நிலையில் சிறிலங்காப் படையினர் இல்லையெனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இக் குற்றச்சாட்டை தெரிவித்துள்ள வடமராட்சி வெகுசன அமைப்புகளின் ஒன்றியம் பொது இடங்களில் இருந்து படையினர் வெளியேறாது விடின் அவர்களுக்கு எதிராக பாரிய போராட்டங்களை நடத்தவுள்ளதாக அறிவித்திருக்கின்றது.

வடமராட்சி கிழக்கில் உள்ள அம்பன் மத்திய மருந்தகத்தை மீள ஒப்படைக்குமாறு சிறிலங்கா படைத்துறை அமைச்சின் செயலாளர் உத்தரவு பிறப்பித்த நிலையிலும் படையினர் தொடர்ந்தும் அதில் தங்கியிருப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## சட்டவிரோத கைது துன்புறுத்தலுக்காக தமிழ் பெண்ணுக்கு ஒரு லட்சம் நஷ்ட ஈடு

(கொழும்பு)

25 வயதுடைய திருமணமாகாத பெண்ணொருவரை சட்ட விரோதமாகக் கைது செய்தமை, துன்புறுத்தியமை தொடர்பாக நாரகென்பிட்டிய பொலிஸ் குற்றப் பிரிவுப் பொறுப்பாளர் செல்வின் சாலெ என்பவர் மீது அஞ்சலின் றோசனா என்பவரால் தொடரப்பட்ட வழக்கில் ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடாக வழங்குமாறு உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மேற்படி முறைப்பாட்டாளர் தமது பெற்றோருடன் வாழ்ந்து வந்தவர். நாரகென்பிட்டியவிலுள்ள விடுதியொன்றில் உதவியாளராகக் கடமையாற்றி வந்திருந்தபோது, 2000ஆண்டு டிசம்பர் மாதம் 3 ஆம் திகதியன்று அந்த வீட்டு உரிமையாளரின் தங்கக் கைக்கடிகாரம் களவு போனமை தொடர்பாக கைது செய்யப்பட்டிருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பி. செயலர் பிரிவு ரீதியாக வலயக் கல்விப் பணிமனை

**அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு**

இலங்கையின் கல்வி நிருவாக கட்டமைப்பில் விரைவில் மாற்றங்கள் செய்யப்பட்டு தற்போதுள்ள வலயங்கள் கோட்டங்கள் என்பவற்றுக்குப் பதிலாக இருநூறு கல்வி வலயங்கள் உருவாக்கப்படும். ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுக்கும் ஒவ்வொரு கல்வி வலயம் அமைக்கப்படவுள்ளது என தம்மைச் சந்தித்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் தமிழ் மொழி மூல மாணவர்களின் கல்வி நிருவாகம் மேற்பார்வை செய்வதற்கு தமிழ்மொழி மூல அதிகாரிகள் இல்லை.

எனவே, புதிய நடைமுறையில் அவ்வாறான பாரபட்சம் காட்டப்படக்கூடாது என்று சங்கம் கல்வி அமைச்சரைக் கேட்டுக் கொண்டபோது, சங்கத்தின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அமைச்சர், புதிய வலயங்கள் அமைக்கப்படும்போது இவ்விடயங்களைக் கவனத்தில் கொள்வதாகக் கூறியுள்ளார்.

## "புனர்வாழ்வுச் செய்தி"

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மாத வெளியீடான "புனர் வாழ்வுச் செய்தி" ஆனி மாத இதழ் நேற்று வெளிவந்துள்ளது.

"போர் தணிந்தும் தணியாத அவலங்கள்" என்ற பிரதான தலைப்புச் செய்தியுடன் வெளிவந்துள்ள இவ்விதழில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பல்வேறு வேலைத்திட்டங்கள் தொடர்பான செய்திகள் வர்ணப்படங்களுடன் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### சிந்தனைக்கு



சமூக விடுதலை என்ற எமது குறிக்கோளில் பெண் விடுதலை பிரதான இடத்தை வகிக்கிறது.

தமிழீழத் தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 06-08-2002

## உறுதியற்ற நிலை

சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் அவரது அமைச்சரவையையும் பதவி நீக்கம் செய்து விட்டு முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தலைமையிலான அரசாங்கம் ஒன்றை அமைக்க பொதுசன ஐக்கிய முன்னணியிலுள்ள சில குழுக்களும், ஜே.வி.பி.யும் இணைந்து சதித்திட்டம் தீட்டி வருவதாக ஆளும் கட்சி குற்றம் சாட்டியிருக்கிறது.

ஆளும் கட்சியின் இக் குற்றச்சாட்டு உண்மையானதா? என்ற கேள்வி ஒருபுறமிருக்க இவ்வாறானதொரு பாரதூரமான குற்றச்சாட்டைச் சுமத்தும் அளவிற்கு இவ்விரு கட்சிகளுக்கும் இடையேயான முரண்பாடு மேலும் தீவிர நிலைக்குச் சென்று வருவதையே இக்குற்றச்சாட்டு வெளிப்படுத்துகிறது.

அதேவேளை, ஐக்கிய தேசிய முன்னணியை அகற்றிவிட்டு ஆட்சியை அமைத்துக் கொள்ளும் முயற்சியில் பொதுசன ஐக்கிய முன்னணி ஈடுபட்டால் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதிப் பதவியைக் கைவசம் வைத்துக் கொண்டு அந்த அதிகாரங்களை விரும்பியவாறு பயன்படுத்த முடியாத நிலையை அதற்கு கடந்த தேர்தல் ஏற்படுத்தியிருக்கிறது.

அதற்கும் மேலாக, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முதல் கட்சித் தொண்டர்கள் வரை ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தால் துன்புறுத்தல்களுக்கு உள்ளாவதாக பொதுசன ஐக்கிய முன்னணி முறைப்பாடு செய்கிறது. பொதுசன ஐக்கிய முன்னணியின் ஏழு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறைவாசம் அனுபவிக்க நேர்ந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச அண்மையில் தெரிவித்திருக்கிறார். சனாதிபதி முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க உட்பட பலர் மீது மோசடிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.

இவ்வாறு நிறைவேற்று அதிகாரத்தைக் கையில் வைத்துக் கொண்டே பல நெருக்குவாரங்களைச் சந்தித்து நிற்கும் பொதுசன ஐக்கிய முன்னணி எவ்வளவு விரைவில் பாராளுமன்றத்தைக் கைப்பற்ற முடியுமோ அவ்வளவு விரைவில் கைப்பற்ற முயற்சிகளை மேற்கொள்ளும் என்பது வெளிப்படை.

ஆனால் இன்றுள்ள சூழ்நிலையில் பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டு பொதுத் தேர்தலை எதிர்கொள்ளும் தைரியம் பொதுசன ஐக்கிய முன்னணிக்கு இல்லை. ஏனெனில் சமாதான முயற்சிகளை ஆதரிக்கும் மன நிலையில் உள்ள மக்கள் அதற்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் பொதுசன ஐக்கிய முன்னணியை ஆதரிக்க மாட்டார்கள்.

எனவே பாராளு மன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தல் ஒன்றை ஏற்படுத்தாது ஆட்சியைக் கைப்பற்றும் முயற்சியில் இவர்கள் ஈடுபடுவார்கள் என எதிர்பார்க்கலாம். இவ்வாறான்தொரு முயற்சியைப் பொதுசன ஐக்கிய முன்னணி பிரஸ்தாபித்தும் உள்ளது.

அதாவது பாராளுமன்றத்தைக் கலைக்காது ஆட்சியை எவ்வாறு கைப்பற்றுவது என்று தனக்கு நன்றாகத் தெரியும் என சனாதிபதி சந்திரிகா முன்னரே தெரிவித்திருக்கிறார். அவ்வாறே அமைச்சர்கள் சிலரும் கூறிவந்தனர்.

இந்த முயற்சியில் ஜே.வி.பி. பொதுசன ஐக்கிய முன்னணியின் ஒரு பங்காளியாக இருக்கும் என்று ஐ.தே.முன்னணி குற்றம் சாட்டும் அதேவேளை, ஜே.வி.பி. யின் பங்கு இருப்பதற்கான சாத்தியங்கள் அதிகம் என நம்பலாம். ஏனெனில் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியில் இருப்பதை விட பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருப்பது ஜே.வி.பி.க்கு அனுகூலமானதே.

ஆனால் பொதுசன ஐக்கிய முன்னணியின் 77 ஆசனங்களுடன் ஜே.வி.பி.யின் 16 ஆசனங்களும் சேர்ந்தாலும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கும் சாத்தியம் இல்லை. அதற்கு மேலும் 20 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவாவது தேவை. இவ்வாறான ஆதரவை முஸ்லீம் காங்கிரஸ், இ.தொ.க. போன்ற கட்சிகளிடம் பொதுசன ஐக்கியமுன்னணி எதிர்பார்க்கலாம்.

எவ்வாறாயினும் கடந்த பாராளுமன்றத்தில் 107 ஆசனங்களைத் தம்வசம் வைத்திருந்த பொதுசன ஐக்கிய முன்னணியால் ஒரு வருட காலம் மட்டுமே இழுத்துப்பறித்து ஆட்சியில் நிலைக்க முடிந்தது. இவ்வாறான நிலையில் 77 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இக் கட்சிகளுடன் ஆட்சியில் நிலைக்க முடியுமா ? என்ற கேள்வியும் எழுகின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாக கடந்த பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சி கவிழ கட்சிக்குள் ஏற்பட்ட பிளவே முக்கிய காரணமாக அமைந்தது. அவ்வாறானதொரு சூழ்நிலை இன்று இல்லை எனக் கூறி விட முடியாது. அதாவது கட்சிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் பௌசிக்கும் இடையேயான முரண்பாடு, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கும் அனுரா பண்டார நாயக்கவுக்கும் இடையே எழுந்துள்ள அடுத்த சனாதிபதி வேட்பாளர் யார்? என்ற போட்டி என்பன போன்ற விடயங்கள் இதனை ஊர்ஜிதம் செய்கின்றன.

இவ்வாறான நிலையில், ஓர் உறுதியற்ற ஆட்சி அல்லது தொடர்ச்சியாக வருடாவருடம் நடக்கும் பொதுத்தேர்தல் என்பனவற்றையே சிறிலங்காவில் எதிர்பார்க்க முடியும்.

~முஸ்லிம்களுக்கு உத்தரவாதமளிக்காத நிலையில் ~

# அரசு - புலிகள் சமாதானப் பேச்சிற்கு சிறி. மு.காங்கிரஸ் ஆதரவளிக்காது

### அமைச்சர் ரவூப் ஹக்கீம் அறிவிப்பு

(கொழும்பு)

தாய்லாந்து பேச்சுவார்த்தைக்கு முன்னர் வடக்கு - கிழக்கில் உள்ள முஸ்லிம்களின் தனித்துவத்திற்கும் பாதுகாப்பிற்கும் உத்தரவாதம் அளிக்காத நிலையில் அரசாங்கம் பேச்சுவார்த்தை மேசையில் அமர்ந்தால் அதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளிக்காது என்று கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

திருமலை - கிண்ணியா பிரதேச சபை மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தையின் போது உத்தேச இடைக்கால நிர்வாகசபை அமையும்போது முஸ்லிம்களின் பிரதிநிதித்துவமும் அதில் உரிய முறையில் இடம் பெறவேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

மூன்று தொகுதிகளை மட்டும் உள்ளடக்கிய தென்கிழக்கு அலகை வழங்குவதன் மூலம் மாத்திரம் முஸ்லிம்களின் பிரச்சினைக்கு முழுமையான தீர்வைக் காணமுடியாது என்றும் அவர் கூறினார்.

# அரசு - புலிகள் பேச்சுக்கான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை

### ~ அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு ~

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் மிகவும் பலமான அடித்தளத்துடன் ஆரம்பிக்கப்படும் என்று அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அதேவேளை பேச்சுவார்த்தைக்கான திகதி இதுவரை தீர்மானிக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் காரணமாக தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலை மக்களிடையே சமாதானம் தொடர்பாக மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவசரமாக ஆரம்பிக்கப்படும் பேச்சுவார்த்தைகள் இடையில் முறிந்து போவதன் காரணமாகவே புலிகளுடனான பேச்சுவார்த்தை தாமதம் அடைவதாக அவர் தெரிவித்தார்.

- சிறி. படையினருக்கு உதவுவதுபற்றி ஆராய -

# நான்கு அமெரிக்கக் குழுக்கள் அடுத்தவாரம் சிறிலங்கா விஜயம்

(கொழும்பு)

நான்கு அமெரிக்கக் குழுக்கள் அடுத்தவாரம் சிறிலங்காவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்காப் படையினருக்கு ராணுவ பொருளாதார ரீதியிலான உதவி வழங்குதல் குறித்து ஆராயவே இந்த நான்கு குழுக்களும் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளதாக அமெரிக்க தூதரக வட்டாரங்கள் கூறுகின்றன.

இக்குழுக்கள் சிறிலங்காவின் தற்போதைய நிலவரம் குறித்து அமெரிக்க அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளன. இதனை அடுத்தே சிறிலங்காவுக்கான உதவிகள் குறித்து அமெரிக்கா தீர்மானம் எடுக்கவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

# இராணுவ ஆட்சேர்ப்பு தோல்வி பாதுகாப்பற்ற நிலை உருவாகுகிறது

### ~சிஹல உறுமய அரசிற்கு எச்சரிக்கை ~

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்துக்கு புதிதாக ஆட்களைச் சேர்க்க இம்முறை எடுக்கப்பட்ட முயற்சியும் பெரிதும் பலனளிக்கவில்லை என சிஹல உறுமய கட்சியின் பிரதான அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

புதிதாக ஆட்களைச் சேர்ப்பதற்காக இம்முறை நடைபெற்ற நேர்முகத் தேர்வில் 425 இளைஞர்களே சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

ஒரு லட்சத்து 35 ஆயிரம் படையினரைக் கொண்ட தரைப்படையில் இதுவரையில் 55 ஆயிரம் பேர் தப்பியோடி விட்டனர். இந்நிலையில் இராணுவத்தில் ஆட்கள் குறைவது தொடர்பாக அரசு எதுவித நடவடிக்கையையும் எடுக்காமல் இருப்பது நாட்டில் பாதுகாப்பற்ற தன்மையை உருவாக்கியுள்ளது. ஆனால் பிரதமரின் வாசஸ்தலமான அலரிமாளிகை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக நான்கு மில்லியன் ரூபா செலவில் நவீனமயமாக்கப்பட்டுள்ளது என்றும் சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.

# ஜெயலலிதாவின் கடிதம் குறித்து கண்ணப்பனிடம் விளக்கம் கோரல்

(சென்னை)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக அமைச்சர் கண்ணப்பன் கருத்து தெரிவித்து வருவது குறித்து இந்தியத் துணைப் பிரதமர் அத்வானி மத்திய அமைச்சரான செஞ்சிராமச்சந்திரனிடம் விளக்கம் கேட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக மத்திய அமைச்சர் கண்ணப்பன் கருத்துத் தெரிவித்து வருவதால் அவரை மத்திய அமைச்சரவையில் இருந்து நீக்க வேண்டும் என்று பிரதமர் வாஜ்பாய்க்கு ஜெயலலிதா கடிதம் அனுப்பியிருந்தார். இதன் பிரதி துணைப் பிரதமர் அத்வானிக்கும் அனுப்பப்பட்டது.

இந்த நிலையில் அத்வானி விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக மறுமலர்ச்சித் திராவிடக் கழகத்தின் மத்திய அமைச்சர் கண்ணப்பன் கருத்துத் தெரிவித்து வருகின்றமை குறித்து செஞ்சிராமச்சந்திரனிடம் விளக்கம் கேட்டிருப்பதுடன் தற்போதைய நிலைமையில் பத்திரிகையாளர்களை சந்திப்பதை தவிர்க்குமாறும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஜெயலலிதா அனுப்பிய கடிதம் குறித்து கண்ணப்பனிடம் மத்திய அரசு விளக்கம் கேட்டிருப்பதாக மத்திய உள்துறை அமைச்சு வட்டாரங்கள் கூறுகின்றன.

# தேர்தலில் வாக்களிக்க வை. கோ. விற்கு அனுமதி

இந்தியாவின் துணை சனாதிபதித் தேர்தலுக்கு தபால் மூலம் வாக்களிக்க மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலர் வை.கோ.வுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்திய துணை சனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க தனக்கு அனுமதி வழங்க வேண்டும் என வை.கோ. விடுத்த கோரிக்கையை ஏற்று தேர்தல் அதிகாரி அவரை தபால் மூலம் வாக்களிக்க அனுமதி வழங்கியுள்ளார்.

துணை சனாதிபதித் தேர்தலில் தேசிய சனநாயகக் கூட்டணியின் சார்பில் பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான மைலோன்சிற் தெசவத்த, காங்கிரஸ் கட்சியின் சார்பில் சுசிக்குமார் பின்டேயும் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சனாதிபதியின் அதிகாரத்தினை குறைக்கும் முயற்சி வெற்றிதராது

## - பொ.ஐ.மு. செயலாளர் டி.எம்.ஜெயரட்ண

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தைக் குறைக்கும் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படுமானால் அதற்கு ஆதரவாக பொதுசன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் வாக்களிக்க மாட்டார்கள். இவ்வாறு பொதுசன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம்.ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று சனாதிபதி ஆட்சி முறையில் சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பும் வேறுபல அரசியல் நன்மைகளும் இருப்பதால் சிறுபான்மைக் கட்சிகளும் இந்தச் சட்டமூலத்திற்கு ஆதரவாக வாக்களிக்க மாட்டாது.

தமிழ்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதற்கு ஆதரவாக வாக்களிக்க மாட்டார்கள் என நான் நம்புகின்றேன்.

சிறுபான்மைக் கட்சிகளுடன் இந்தச் சட்டமூலம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் பேச்சுக்களை நடத்திவருகிறார்.

அரசாங்கம் இந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் தோல்வியை அடையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# திலீபன்மருத்துவ சேவை நெடுந்தீவில் ஆரம்பம்

தீவுப்பகுதி மக்களின் மருத்துவப்பிரச்சினையை கருத்தில் கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவினரால் நெடுந்தீவில் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை மருத்துவ பிரிவின் வைத்திய அதிகாரி கண்ணன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் நெடுந்தீவு, அனலைதீவு ஆகிய இடங்களில் மருத்துவ முகாம் அமைக்கப்பட்டு பொது மருத்துவ சிகிச்சை, கண் சிகிச்சை, பற்சிகிச்சை, குழந்தை நல சிகிச்சை என்பன மருத்துவப் பிரிவின் வைத்திய அதிகிகளான விக்ரமன், ஓவியன், கண்ணன் ஆகியோராலும், மருத்துவக் கல்லூரி மாணவர் களாலும் மேற்கொள்ளப்பட்டது.

இந் நிகழ்வில் பெருந்தொகையான நோயாளர்கள் பல்வேறு வகையான நோய்களுக்கு சிகிச்சை பெற்றுள்ளனர். தியாக தீபம் திலீபன் மருத்துவசேவை நிலையங்களில் எட்டாவது நிலையமாக நெடுந்தீவு அமைகின்றது. இவ் மருத்துவ சேவை நிலையத்தின் பொறுப்பு மருத்துவப் போராளியாக பூவேந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

## - பன்னங்கண்டி மரப்பாலத்தில் -

# சிலிப்பர் கட்டைகள் சிலவற்றைக் காணவில்லை

(நமது நிருபர்)

கிளிநொச்சி கரடிப்போக்கு பன்னங்கண்டி வீதியில் உள்ள மரப்பாலத்தில் இருந்த சிலிப்பர் கட்டைகள் சில அகற்றப் பட்டிருப்பதால் இப்பாலமூடாகப் பயணம் செய்யும் பிரயாணிகள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பன்னங்கண்டிப் பாடசாலைக்கு அருகில் உள்ள மரப்பாலத்தில் இருந்த சிலிப்பர் கட்டைகள் சிலவே அகற்றப்பட்டு பாலம் ஆபத்தான நிலையில் தற்போது உள்ளது.

இதெவேளை பன்னங்கண்டியில் இருந்து பரந்தன் வீதி வரையான பாதை எங்கும் இரண்டு அடி தொடக்கம் மூன்று அடி வரையான ஆழமுடைய பாரிய குழிகள் வீதி நெடுகிலும் காணப்படுகின்றன.

இதனால் இப் பாதையூடாக பயணங்களை மேற்கொள்ளும் பிரயாணிகள் சிரமங்களையும் விபத்துக்களையும் எதிர்நோக்கி வருவதுடன் சம்பந்தப்பட்டவர்கள். இதில் கவனம் செலுத்த வேண்டுமெனவும் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

**எரு ஏற்றி....**

இவ் வீதியில் உள்ள இரண்டு மரப்பாலங்களினால் பாரஊர்திகள் செல்வது மிகவும் ஆபத்தான விடயமாகவே இருந்து வருகின்றது.

வன்னிப் பெரும் நிலப் பரப்பில் உள்ள பெரும்பாலான வீதிகள் நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலைக்குப் பின்னரும் போக்குவரத்துக்கு எந்த வகையிலும் உதவாத நிலையில் உள்ளன. இதை வீதி அபிவிருத்தித் திணைக்கள, வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றின் நிறைவேற்றுப் பொறியியலாளர்கள் குறிப்பிட்டுள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும். (08)

**அனுரா...**

னதாகும் என்றும், சனாதிபதி புஷ் எண்ணூறு வாக்குகளினாலேயே வெற்றி பெற்று பதவிக்கு வந்தார். ஆனால், நான் பத்தாயிரம் வாக்குகளால் எம்.பி.யாக தெரிவுசெய்யப்பட்டேன் என்று கூறியிருந்தார். இதற்கே அமெரிக்க தூதரகம் விளக்கம் கேட்டுள்ளது. இது தொடர்பாக அனுரா பண்டார நாயக்க கருத்துக் கூறுகையில்; இதுகுறித்து "விளக்கம் நான்கு பக்கங்களில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது" என்று மட்டும் கூறிய அவர், மேலதிக கருத்துக்கள் கூற மறுத்து விட்டதாக தெரிய வருகிறது.

**அரசாங்கத்தை.....**

விட்டு விலகி எதிர்க்கட்சியில் சேர்ந்து கொண்டோம்.

கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தெளிவான ஆதரவை தெரிவித்தனர். மக்களின் விருப்பத்துக்கமைய இது சனநாயக முறையில் நடைபெற்ற நிகழ்வாகும். இந்த ஆண்டில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் 95 சதவீத வாக்குகளை அரசாங்கத்துக்கு வழங்கினர்.

மக்களின் விருப்பத்தை எதிர்க்கும் எந்தவொரு முயற்சியையும் மக்கள் தோற்கடிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி அரசாங்கத்தைத் தோற்கடிக்க எடுக்கப்படும் முயற்சிகளை அனுமதிக்க முடியாது. எந்தவொரு நிலைமையையும் சமாளிப்பதற்கு அரசாங்கம் பெரும் திடசங்கற்பத்துடன் நடந்து கொள்ளும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

**பிணையில்....**

ஜெயலலிதா அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையில் கவனம் செலுத்தி வருகின்றார் என்றும் அவர் அப்போது கூறினார்.

ஈழத்தமிழர் பிரச்சினை சுமுகமாக தீரவேண்டும் என்பதில் தமிழர்களாகப் பிறந்த எல்லோரும் குரல் கொடுப்பார்கள். அப்பிரச்சினை சுமுகமாக தீருவதற்கு இந்தியப் பிரதமர் வாஜ்பாய் உறுதியாக உள்ளார் என ராமதாஸ் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளார்.

## - தென்மராட்சிப் பகுதியில் -

# 195 வீடுகள் அமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி

இராணுவநடவடிக்கையால் பெரும் அழிவுக்கு உள்ளாகியுள்ள தென்மராட்சியில் ஐந்து கிராம சேவையாளர் பிரிவுகளில் 195 வீடுகள் அமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவிவழங்கவுள்ளது.

கிராமசேவையாளர்கள் மூலம் தெரிவு செய்யப்படும் இப் பயனாளிகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது. இதேவேளை மேலும் 500 வீடுகளும் 50 கிணறுகளும் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

# மாவிட்டபுரம் ஆலயத்தில் 8-ம் திகதி தீர்த்தோற்சவம்

மாவிட்டபுரம் கந்தசாமி ஆலய உற்சவம் சிறப்புற நடைபெற்று வருகிறது. எதிர் வரும் 8- ம் திகதி ஆடி அவமாசை தினத்தன்று தீர்த்த உந்சவம் நடைபெறும்.

அதியுச்ச பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள இவ் ஆலயத்திற்குச் செல்வதற்கு பாஸ் நடைமுறை நீக்கப்பட்டு அடையாள அட்டையைக் காண்பித்துவிட்டு செல்லக்கூடிய வகையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் அறிவிக் கப்பட்டுள்ளது.

சேந்தான் குளம் வீதியும் தெல்லிப்பழை வீதியும் திறக்கப்பட்டுள்ளன.

கீரிமலை செல்லும் பக்தர்கள் பிதிர்க் கடனிலும் அன்னதான நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளலாம் என ஆலய குரு தெரிவித்துள்ளார்.


## பார ஊர்தி ஓட்டுநர் பணிக்கான வேண்டுகை

**கல்வித்தகைமை:** 8ஆம் வகுப்பிற்கு குறையாத கல்வித்தகைமை

**வயது:** 35 - 50 வருடங்கள்.

அனுபவம்: 10 வருடத்திற்கு குறையாத பாரவூர்தி ஓட்டுநர் அனுபவம். அத்துடன் தமிழீழ அல்லது இலங்கை போக்குவரத்து ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும்.

மேற்படி தகைமைகள் உடையோர் 15ம் திகதிக்கு முன்பாக தகைமைச் சான்றிதழ்களுடன் தமிழீழ சுகாதார சேவைகள், நடுவப்பணியகம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு நேரில் சமுகம் தரவும்.

பொறுப்பாளர்,
தமிழீழ சுகாதாரசேவைகள். (சி-6985)



## 5ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 1974 ❖ 11 ❖ 01



உதிர்வு 1997 ❖ 08 ❖ 07

**கந்தசாமி உதயச்சந்திரன்**
(தலைமைக் காவலர் தமிழீழ காவல்துறை)

தலைமகனாய் வந்தெங்கள் மடி தவழ்ந்த நித்திலமே
தரணிதனைக் காக்க தனையன் அணிசேர்ந்தவனே
மலைபோன்ற துயரமதை எமக்கழித்துச் சென்றாயே
ஐந்தாண்டு சென்றாலும் ஆறாதையா உன் பிரிவு.

நிரந்தர முகவரி:
பாலாவோடை,
களபூமி,
காரைநகர்.

ஜோதிஷர் (தந்தை)
காரை, எஸ்.கே.சாமி,
தேராவில்.

(சி-7027)



## விண்ணப்பம் கோரல்

ஈழநாதம் பத்திரிகை நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் கணனிப் பயிற்சி பெறுவதற்கும் மற்றும் ஒப்புநோக்குநர் பதவிக்கும் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### ❖ ஒப்பந்த அடிப்படையில் கணனிப் பயிற்சி

**தகைமை:** தமிழ் தட்டச்சில் தேர்ச்சி பெற்றவராகவும் க.பொ.த.சா/தரத்தில் சித்தி அடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

கணனிப் பயிற்சியின் போது மூன்று மாதங்களுக்குஉதவு தொகையாக 1000/= வழங்கப்படுவதுடன் பயிற்சி நெறியில் தேர்ச்சி அடைவோர் தகுந்த சம்பளத்துடன் பணிக்கு அமர்த்தப்படுவர்.

### ❖ ஒப்புநோக்குநர் பதவி

**தகைமை:** க.பொ.த.உயர்தரத்தில் தமிழில் அதிவிசேட (A) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை 07.08.2002 அன்று கிளி. ஈழநாதம் பணிமனையில் காலை பத்து மணிக்கு நடைபெறும்.

(6984)



## 15-08-2002 மடுக்கோவில் பெருநாள்

# பேருந்துப்பணி

அளம்பில், முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை, கிளிநொச்சி ஆகிய இடங்களில் இருந்து 13.08.2002 அன்று காலை 8.30மணிக்கு மடுக் கோவிலுக்கான பேருந்துப்பணிகள் புறப்படும். பின் 16.08.2002 காலை 8.00மணிக்கு மடுக்கோவிலில் இருந்து இவ் ஊர்களுக்கு பேருந்து திரும்பும்.

தமிழீழ போக்குவரவுக்கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி-7028)